# இஸ்லாமிய மாணவர்களின் சமூகவியல் பாடத்தெரிவில் செல்வாக்குச் செலுத்தும் சமூகப் பண்பாட்டுக் காரணிகள்: யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினை மையமாகக் கொண்ட ஒரு விடய ஆய்வு

T. Amsathvani[1], T. Rusika[2] and C. Mathusha[3]

[1,2,3] University of Jaffna
rusikathabananthan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்கள் தமது விருப்பத்திற்குரிய பாடங்களை தெரிவு செய்வதில் பல்வேறு காரணிகளினை கருத்தில் கொள்வது வழமையாகும். குறிப்பாக தமது சமூக பண்பாட்டு நியமங்களினை கருத்திற் கொண்டும் பாடத்தெரிவுகளினை மேற்கொள்கின்றனர்.அந்த வகையில் சமூகவியல் கற்கை என்பது பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களுக்கு ஒரு புதிய கற்கைநெறியாகக் காணப்படுகின்றது. அத்துடன் இப்பாடநெறியானது ஏனைய பாடநெறிகளினை விட ஆய்வுகளில் அதிக கவனம் செலுத்துவதுடன் சமூகத்துடன் அதிக பிணைப்பினையும் கொண்டுள்ளது.எனவே ஏனைய கலைத்துறைசார் பாடத்தெரிவுகளினை விட இப்பாடத்தெரிவின்போது மாணவர்கள் தமது சமூக மற்றும் பண்பாட்டு நியமங்களினை முக்கியமாகக் கருத்திற் கொள்கின்றனர். அந்த வகையில் பல்பண்பாட்டு அம்சங்களினை கொண்ட இலங்கையில் வாழும் இஸ்லாமிய மாணவர்களின் சமூகவியல் பாடத்தெரிவில் செல்வாக்குச் செலுத்தும் தனியாள், சமூக மற்றும் பண்பாட்டுக் காரணிகளினை இனங்காணும் நோக்கோடு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வானது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் முதலாம் வருடம் தொடக்கம் நான்காம் வருடம் வரை கற்கும் மாணவர்களினை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு சமூகவியல் துறையில் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை (2019) 39 ஆகும். இதில் நோக்கத்திற்குரிய மாதிரியெடுப்பின் மூலமாக 15 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல்நிலைத் தரவாக விடய ஆய்வு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன். இரண்டாம் நிலை தரவுகளாக சமூகவியல் துறை புள்ளிவிபரங்கள் மற்றும் ஏனைய ஆய்வுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் பெறுபேறுகளாக சமூகவியல் கற்கையினை தெரிவுசெய்துள்ள இஸ்லாம் சமய மாணவர்கள் பின்வரும் விடயங்களினை கருத்திற்கொண்டுள்ளமையினை அறிய முடிந்துள்ளது.சமூகவியல் பாடமானது சமூகம்சார் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்குவதனால் இஸ்லாமிய மாணவர்கள் இப்பாடத்தினைத் தெரிவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். அத்துடன் சமூகத்தில் தமது குடும்பத்தின் பொருளாதார நிலைமை, தனிநபர் ஆளுமை, பல்கலைக்கழகச் சூழலில் சிரேஷ்ட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடனான இடைவினைகள், தொழிலுக்கான வாய்ப்புக்கள் மற்றும் இஸ்லாமிய சமூகத்தினால் பேணப்படும் பண்பாட்டு நியமங்கள் என்பவற்றினைக் கருத்தில் கொண்டே சமூகவியல் கற்கையினைத் தெரிவுசெய்து கற்று வருகின்றனர்.

**திறவுச் சொற்கள்:** சமூகவியல் , பாடத்தெரிவு, பல்கலைக்கழக மாணவர்கள், பண்பாடு, சமூகச் சூழல்

## அறிமுகம்

இன்று உயர்கல்வி என்பது உலகளாவிய ரீதியில் சமூகப், பொருளாதார நிலைமைகளில் பாரிய மாற்றங்களினை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இதுவே தனியாள் மற்றும் சமூகத்தினைப் புரிந்து கொள்வதற்கான அறிவினையும், திறன்களினையும் வழங்குகின்றது. உயர்கல்வியில் மாணவர்கள் பாடத்தினை தெரிவு செய்தல் என்பது முக்கியமான ஒரு தீர்மானத்தினை எடுக்க வேண்டிய சூழ்நிலையாகக் காணப்படுவதுடன், சவால் நிறைந்த விடயமாகவும் அமையப்பெற்றுள்ளது எனலாம். துறைரீதியான திருப்தி, மாணவர்களிடையே காணப்படும் அறிவு, கற்றலுக்கான இயலுமைகள் என்பனவும் (Samara.F,2015) தொழில்சார் விருப்பம், பொருளாதார ரீதியிலான செலவுகள் என்பனவும் பாடத்தெரிவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகக் காணப்படுகின்றன (Ifran Raja WasimAhmed Et al.,2013).

இலங்கையினைப் பொறுத்த வரையில் இது பல்பண்பாட்டு அம்சங்களினைக் கொண்ட ஒரு நாடாகும். இங்குள்ள பல்கலைக்கழகங்களில் பல்வேறு இனம், சமயம் மற்றும்

சமூகரீதியிலான வேறுபாடுகளினைக் கொண்ட மாணவர்கள் கற்றுவருகின்றனர். இவர்கள் பல்கலைக்கழகங்களில் பாடத்தெரிவுகளினை மேற்கொள்கின்றபோது பல்வேறுபட்ட காரணிகளையும் கருத்திற் கொள்கின்றனர். அந்த வகையில் சமூகவியல் என்பது ஒரு இளந்துறையாகும். இது அடிப்படையில் சமூகத்திலுள்ள மனிதர்கள் குறித்தும் அவர்களின் நடத்தைகள், சமூக அமைப்புக்கள், சமூகப் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்கின்ற ஒரு துறையாகும். இது சமூகத்திலுள்ள அனைத்துக்கூறுகள் மீதும் ஆழமான விசாரணைகளினை மேற்கொள்வதனால் இது ஏனைய கலைத்துறைப் படங்களினை விட தனித்துவமானதாகக் காணப்படுகின்றது. அத்துடன் இது களப் பயணங்கள்(Field Work), ஆய்வுகள் மூலமான கற்றலையும் தனக்கான தனித்துவமான அம்சமாகக் கொண்டுள்ளது.

மேலும் இப்பாடநெறியானது உயர்தரம் முடித்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களுக்கு ஒரு புதிய பாடநெறியாக அமையப் பெற்றுள்ளது. எனவே இப்பாடநெறியினை தெரிவு செய்கின்றபோது மாணவர்கள் தமது குடும்ப பொருளாதார நிலைமைகள், தமது இயலுமை, தொழில்சார் வாய்ப்புக்கள், பல்கலைக்கழகச் சூழல் போன்ற பல்வேறுபட்ட காரணிகளை கருத்திற் கொள்கின்றனர். இவற்றினைவிட முக்கியமாக சமூகவியலின் பாடப்பரப்பு விசாலமானதாகவும், பிரயோகரீதியானதாகவும் அமைந்திருப்பதனால் இப்பாடத்தினை கற்பதில் தமக்கு கிடைக்கக்கூடிய குடும்ப மற்றும் சமூக ஆதரவு நிலைகள், தமது சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் மற்றும் விலக்களிக்கப்படும் பண்பாடு மற்றும் நியமங்கள் என்பவற்றிற்கு மாணவர்கள் இப்பாடத்தெரிவின் போது அதிகளவு முக்கியத்துவத்தினை அளிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் இலங்கையில் முஸ்லிம் சமூக மக்கள் ஏனைய இன மக்களினைப் போலவே பல்வேறு தனித்துவமான சமூக மற்றும் பண்பாட்டு அம்சங்களினை பேணிவருகின்ற மக்களாவர். இச்சமூகத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு கற்க வருகின்ற மாணவர்கள் தமது சமூக மற்றும் பண்பாட்டு அம்சங்களுக்கும், குடும்ப பின்னணிக்கும், தொழில்சார் வாய்ப்புக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து பாடத்தெரிவுகளினை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் இஸ்லாமிய மாணவர்களின் சமூகவியல் பாடத்தெரிவில் செல்வாக்குச் செலுத்தும் தனியாள், சமூக மற்றும் பண்பாட்டுக் காரணிகளினை இனங்காணும் விதமாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

**Study Setting :-**ஆய்விற்குரிய மையமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டு அங்கு முதலாம் வருடம் தொடக்கம் நான்காம் வருடம் வரை சமூகவியல் துறையில் கல்வி கற்கும் மாணவர்கள் (2019 ஆம் ஆண்டு) ஆய்விற்குட்படுத்தப்பட்டனர்.

**ஆய்வு வடிவம் :-**இவ்வாய்வு பண்புசார் ஆய்வு (Qualitative Research) வடிவமாக காணப்படுகின்றது.

**தரவுசேகரிப்பு முறைகளும், மாதிரித் தெரிவும்**

**தரவு சேகரிப்புக் கருவிகள்:-**முதலாம்நிலைத் தரவாக விடயஆய்வும்,இரண்டாம்நிலைத் தரவுகளாக யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் துறை புள்ளிவிபரங்களும், ஏனைய ஆய்வுகளும், இணையத்தளத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**மாதிரியெடுப்பு:-** நோக்கத்திற்குரிய மாதிரியெடுப்பின் மூலமாக 15 பேர் ஆய்விற்குட்படுத்தப்பட்டனர். இதனை கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| கற்கும் வருடம் | கற்கும் முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை (இருபாலாரும்) | ஆய்விற்குட்படுத்தப்பட்ட முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை (இருபாலாரும்) |
|---|---|---|
| முதலாம் வருடம் | 30 | 10 |
| இரண்டாம் வருடம் | 1 | 1 |
| மூன்றாம் வருடம் | 7 | 3 |
| நான்காம் வருடம் | 1 | 1 |
| **மொத்தம்** | **39** | **15** |

(மூலம்:- யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் துறை அறிக்கை- 2019)

**ஆய்வு ஒழுக்கவியல்:-**ஆய்விற்குப் பெற்றுக்கொண்ட தரவுகளானவை மாணவர்களின் பூரணசம்மதத்துடன், ஒப்புதல் பெறப்பட்டு தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அத்துடன் ஆய்வில் பங்குபற்ற விருப்பம் தெரிவித்தவர்கள் மட்டுமே ஆய்விற்குட்படுத்தப்பட்டனர்.பெறப்பட்ட தரவுகள் இவ்ஆய்விற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்விற்குட்படுத்தப்பட்டவர்களின் உண்மையான விபரங்களின் இரகசியத்தன்மை பேணப்படும்.

**பெறுபேறுகள் மற்றும் கலந்துரையாடல்**

இஸ்ஸாமிய மாணவர்களின் சமூகவியல் பாடத்தெரிவில் சமூகவியல் கற்கையின் உள்ளடக்கம், தனிநபர் இயலுமை மற்றும் விருப்பம், குடும்ப ஆதரவு, சமூக மற்றும் பண்பாட்டு நியமம் மற்றும் பல்கலைக்கழகச் சூழல் என்பனவற்றின் செல்வாக்குத் தொடர்பில் இப்பகுதியில் ஆராயப்படுகின்றது.

- **பாடத்தெரிவில் சமூகவியல் கற்கையின் உள்ளடக்கம்**

சமூகவியல் கற்கைநெறியானது பரந்துபட்ட விடயங்களையும் பாடப்பரப்பாக உள்ளடக்கியுள்ளது. இது சமூகத்தின் கூறுகளான மனிதர்கள், பண்பாடு (சமயம், கலை, மொழி, நம்பிக்கைகள்), சமூக நிறுவனங்கள் (குடும்பம், அரசு, பாடசாலை, சமய நிறுவனங்கள், திருமணம்) சமூகப் பிரச்சினைகள், சமூக மாற்றங்கள் போன்ற பல விடயங்களினை உலகளாவிய சமூகங்களினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்றது. அத்துடன் இக்கற்கைநெறி இவ்விடயங்களினை கோட்பாட்டு ரீதியாகக் கற்பதுடன் பிரயோகரீதியாகக் கற்பதிலும் அதிக கவனம் செலுத்துகின்றது. இந்நிலையானது பல இஸ்லாமிய மாணவர்களுக்கு தமது சமூகத்தினை மட்டுமன்றி ஏனைய சமூகத்தினையும் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தினை உருவாக்கி அவர்களின் பாடத்தெரிவிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. சமூகவியலின் நோக்கு நிலையானது மிகவும் பரந்துபட்டது குறிப்பாக பண்பாடு, சமூகம், சமூக இடைவினைகள், சமூக மாற்றம், சமூகமயமாக்கல், சமூக வகுப்பு, குடும்பம், சமூக அடுக்கமைவு, இனம், இனத்துவம், விலகல் நடத்தை என்ற விடயங்களினை கற்கின்றது புனைனநளெ நுவ யட.இ1991). இதனைப் பின்வரும் விடய ஆய்வு உறுதிப்படுத்துவதனைக் காணலாம்.

**விடய ஆய்வு -01**

*"இந்தப்பாடத்தில நிறைய விடயங்கள் இருக்கு. இங்க சமூகம் தொடர்பான எல்லாத்தையும் கற்கக்கூடிய மாதிரி இருக்கு. அதோட இங்க எங்கட சமூகம் சம்பந்தமாகவும் ஏனைய இலங்கையில் இருக்கிற சிங்கள தமிழ் சமூகங்கள் சம்பந்தமாகவும் படிக்கக்கூடிய மாதிரி இருக்கும். அதோட சமயம், கல்வி, அபிவிருத்தி, ஊடகம், பால்நிலை, உளவியல் என*

*பல்வேறுபட்ட விடயங்கள் இங்கு கற்பிக்கப்படுவதால் இது நல்ல பாடமாக எனக்கு தோணுது''.*

- **குடும்ப ஆதரவு, தனியாள் இயலுமை மற்றும் விருப்பம்**

எந்தவொரு பாடத்தினைக் கற்பதற்கும் தனியாளின் விருப்பம், பாடத்தினை கற்பதற்கான இயலுமை என்பவை அவசியமாவதுடன் குடும்பத்தின் பொருள் மற்றும் பொருள்சாரா ஆதரவு என்பது மிகவும் அவசியமாகத் தேவைப்படும் காரணிகளில் ஒன்றாக அமைகின்றது. அந்த வகையில் இங்கு சமூகவியல் பாடநெறியினைத் தெரிவு செய்துள்ள மாணவர்கள் தமக்கான குடும்ப ஆதரவு கிடைக்கப் பெற்றமை மற்றும் இக்கற்கை நெறியினை தொடர்வதில் தமக்கிருந்த விருப்பம் என்பனவே தாம் சமூகவியலினை தெரிவுசெய்து கற்பதற்கான காரணமாக முன்வைத்துள்ளனர். இதனையே பின்வரும் விடய ஆய்வுகளும் எடுத்துக்காட்டுவதனை அவதானிக்கலாம்.

**விடய ஆய்வு -01**

*''என்னால இந்தப் பாடத்தைச் செய்யக்கூடிய மாதிரி இருக்கு. அதோட விருப்பமாவும் இருக்கு. எங்கட வீட்டுக்கு பக்கத்தில இருக்கிற வேற யுனிவேர்சிட்டில (University) சோசியோலொயி (Sociology) படிச்சவங்க சொன்னாங்க இது நல்ல பாடம், எனக்கு என்ர சமூகத்தைப் பத்தியும் அறிந்து கொள்ள சரியான ஆர்வம் அதாலயும் நான் இந்தப்பாடத்தை எடுக்கிறேன். அதோட வெளில போய் வேலை செய்ய விருப்பம். இவ்வளவு காலமா வீட்டுக்க இருந்தனாங்க எனி எண்டாலும் வெளில போய் எல்லாத்தையும் அறிந்து கொள்ளலாம்''.*

**விடய ஆய்வு -2**

*''எனக்கு எங்கட குடும்பம் சரியான சப்போட். எங்கட வாப்பாவும்(Father) கஸ்பண்டும் (Husband) என்னைய றிசேச்சுக்கு எல்லா இடமும் கூட்டிப் போவினம். இதால எங்கட சமூகத்தைப் பத்தியும் என்னைய என்ர சமூகம் அறிந்து கொள்ளவும் வாய்ப்பாய் இருக்கு. என்ர பாடத்துக்கு தேவையான கட்டுரைகள், நோட்ஸ், நியூஸ்பேப்பர் எண்டு எல்லாத்தையும் என்ர வாப்பாவும்(Father) கஸ்பண்டும் (Husband) உம்மாவும் தேடி எடுத்து வைப்பினம். அப்படி எல்லா விதத்திலயும் சரியான சப்போட்டா இருக்கினம். அப்பிடி பமிலி சப்போட் இருந்தா இந்தப் பாடத்த நல்ல விருப்பமாப் படிக்கலாம்.''*

ஜழடயவ.ளு(2012) ரூ (சுயதய ஐசகயெ ளுயடிசை நுவ யட.இ2013). பெரும்பாலான மக்கள் தரமான வாழ்க்கையினை அடைந்து கொள்வதனை நோக்கமாகக் கொண்டு நல்ல தொழில் வாய்ப்பினை பெறுகின்றனர். பல்கலைக்கழகமானது தரமான வாழ்க்கை மற்றும் தொழிலை வழங்குகின்றது. பல்கலைக்கழகமானது ஒரு நிறுவனம் அல்ல. இதனுடைய பொறுப்பு தொழிற் பயிற்சியை மையப்படுத்தியே காணப்படுகின்றது. மாணவர்கள் தமது நோக்கத்தினை அடிப்படையாக்க கொண்டு வெவ்வேறுபட்ட பல்கலைக்கழகங்களை தெரிவு செய்கின்றனர். பல்கலைக்கழகத்தினை தெரிவு செய்வதில் பெற்றோர், ஆசிரியர்கள் உதவி புரிகின்றனர்.அதனை விட சமூக பண்பாட்டுக் காரணிகள், பல்கலைக்கழக அமைவிடம் என்பனவும் செல்வாக்கு செலுத்துகின்றது. மேலும் தனிநபர் காரணிகளாக சுயவிருப்பம், பல்கலைக்கழக தூரம் இதனை விட பொருளாதரக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

- **சமூக மற்றும் பண்பாட்டு காரணி**

குறிப்பிட்ட பாடத்தின் மீது ஒவ்வொரு சமூகமும் தமது பண்பாடு மற்றும் விழுமியங்களுக்கு ஏற்ப வெவ்வேறான கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களினை உருவாக்கி வைத்துள்ளன. அவற்றின் செல்வாக்கும் மாணவர்களின் பாடத்தெரிவில் பிரதிபலிப்பதனை அவதானிக்கலாம். பாகிஸ்தானில் உயர்கல்வியை கற்பதில் பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதுடன் தடைகளும் காணப்படுகின்றது. பல்கலைக்கழகச் சூழலில் அதனை அண்டிய நகரங்களில் எவ்வாவறான சமூகப் பாதுகாப்பு இருக்கின்றது, பல்கலைக்கழகத்தை சுற்றியுள்ள நகரத்தில் காணப்படும் வசதிகள், பல்கலைக்கழகத்தில் எவ்வாறான வசதிகள் காணப்படுகின்றது மற்றும் பல்கலைக்கழகத்தின் நற்பெயர், விழுமியம், பண்பாட்டு நடைமுறைகளை கருத்தில் கொண்டே மாணவர்கள்

பாடத்தெரிவினை மேற்கொள்கின்றனர் (Raja Irfan Sabir Et al.,2013). குறிப்பாக முஸ்லிம் சமூக மக்களின் பண்பாட்டு நியமங்கள் முஸ்லிம் மாணவர்கள் சமூகவியல் பாடத்தினைத் தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை பின்வரும் விடய ஆய்வு உறுதிப்படுத்துவதனை அவதானிக்கலாம்.

**விடய ஆய்வு -01**

*''வெளில சமூகவியல் பாடத்தைப்பத்தி ஒரு தவறான கண்ணோட்டம் இருக்கு. இது எங்கள வெளில நிறைய போய்ஸ் கூட பழக வைக்கும். அதோட பால்நிலை சமத்துவம், இன வன்முறை போன்ற சில சமூகம் சார்ந்த நம்பிக்கைகள் விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்களை ஆராய்வதனாலும் இந்தப் பாடம் கடினம் இது எங்கட சமூகம் ஏற்றுக்கொள்ள முடியாதவை பற்றி படிப்பிக்கிதாம். ஆனால் எனக்கு எண்டால் அப்படி தெரியேல என்ர பாடம் நல்ல பாடம் நாங்க இந்த சமூகத்தில எப்படி இருக்கணும் என்ன செய்யணும் எண்டதெல்லாம் சொல்லித்தரிது''.*

- **சமூகவியல் பாடத்தெரிவில் பல்கலைச்சூழல்**

பல்கலைக்கழகச் சூழல் என்பது உயர்தரம் முடித்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு ஒரு புதிய அனுபவமாகும். இங்கு கிடைக்கப்பெறும் பல்வேறுபட்ட இன, மத மற்றும் சமூக வேறுபாடுகளினைக் கொண்ட மாணவர்களுடனான உறவுநிலையும் மாணவர்களின் பாடத்தெரிவில் செல்வாக்குச் செலுத்துகின்றது. சக மாணவர்கள், சிரேஷ்ட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடனான இடைவினைகள் பல்வேறுபட்ட இடங்களிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியினைத் தொடர வந்துள்ள முஸ்லிம் மாணவர்களின் சமூகவியல் பாடத்தெரிவில் செல்வாக்குச் செலுத்தியிருப்பதனை பின்வரும் விடய ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது.

**விடய ஆய்வு -01**

*''நான் புத்தளம் எனக்கு இங்க வரும்போது யாரையும் தெரியாது. எங்கட இனத்தைச் சேர்ந்த சீனியர்ஸ் ஆலதான் நான் இந்தப்பாடத்தை எடுத்தால் நல்லம். அதோட நான் தான் Sociology ஸ்பெசல் டிகிரி ஆ படிக்கிற ஒரேயொரு முஸ்லீம். என் கூட சேர்ந்து படிக்கிற வேற இனத்து வேற பிரதேச மாணவர்கள் நல்ல மாதிரி பழகினம். என்கூட சேர்ந்து பாடம் சம்பந்தமான ஆய்வுகளைச் செய்யினம். எங்களுக்குப் படிப்பிக்கிற லெக்சரஸ்மாரும் நல்ல மாதிரித்தான் எந்த வேறுபாடும் இல்லாமப் பழகினம். இவ்வாறான ஒரு நிலமை இருக்கிறதால நான் தொடர்ந்து சமூகவியலை படிக்கிறதுக்கு ஆர்வமா இருக்கன்''.*

## References


Anthony Giddens, Mitche;; Duneier, Richard P Appeibaum, Deborah S Carr. (1991). Introduction to Sociology. https://lakelandcollege.edu

Fatin Samara. (2015). Factors influencing Student's Choice of Elective Science Course: A Case Study from the American University of Sharjah. https://dx.doi.org/10.4236/jss.2015.38010.

Irfan Raja, Wasim Ahmid, Rana Umair Ashraf And Nadeen Ahmed. (2013) Factors Affecting University and course Choice A Comparison of Undergraduate Engineering and Business Students in Cental Punjab Pakistan. https://www.researchgate.net/publication/259214062.

Polat.(2012). The Factors that Students Consider in University and Department Selection: A Qualitative and Quantitative Study of Kocaeli University, Faculty of Education Students.
https://www.researchgate.net/publication/271562685_The_Factors_that_Students_Consider_in_University_and_Department_Selection_A_Qualitative_and_Quantitative_Study_of_Kocaeli_University_Faculty_of_Education_Students